# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I
8075283

C

1. District : Pudukkottai மாவட்டம் PS: V & AC காவல்நிலையம் Year: 2022 ஆண்டு FIR No: 03 மு.த.அ எண் Date: 25-11-2022 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act - 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(e)

(ii) Act சட்டம்: Indian Penal Code Sections பிரிவுகள்: 109

(iii) Act சட்டம்: Prevention of Corruption Act as amended Act - 2018 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(b) and 13(2) r/w 13(1)(b) r/w 12

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 01-03-2014 நாள் முதல் Date to : 25-07-2018 நாள் வரை

Time Period : நேர அளவு Time from : 26-07-2018 நேரம் முதல் Time to : 30-09-2021 நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : 11.30 நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Through Vigilance Report

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 3 kms. Northern East

Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : G. Imayavaramban குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : Ganesan தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 29-05-1971 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : Indian நாட்டினம் (e) Passport No. : — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Supdt of Police தொழில் (g) Address : V & AC, Pudukkottai முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. S. Nesamani, 39/22, S/o. Sundaraju, Zonal Manager, TN Forest Plantations Corporation, Pudukkottai District.
2. Tmt. N. Gayathri, W/o. Nesamani, No. 40, Bokshal Nagar, Machuvadi, Pudukkottai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவு போன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவைப்பட்டால் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவு போன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு வழக்கு எண் ஏதுமிருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் விவரம் (தேவைப்பட்டால் தனித்தாளில் இணைக்கவும்) —

Seperate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed Tmt. Vijayalakshmi ... Inspector to take up the Investigation / Refused investigation / transferred to PS V & AC, Perambalur ... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே கண்ட அறிக்கையில் உள்ளவை பிரிவு 2ல் குறிப்பிடப்பட்ட பிரிவுகளின்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலன்விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்பட்டுள்ள ........................ பதவி ........................ நிலை புலன்விசாரணை எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் அறிக்கை புகார்தாரருக்கு / தகவல் தருபவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டு, அதன் ஒரு நகல் இலவசமாக கொடுக்கப்பட்டது.

25/11/22

14. Signature / Thumb impression of the Complainant / Informant
புகார்தாரர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 25.11.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

Name: பெயர் G. Imayavaramban
Rank: நிலை Deputy Supdt. of Police, V & AC, Pudukkottai No. எண் ........

**Attachment to Column 12 of First Information Report in Pudukkottai V&AC Cr.No.03/2022.**

**எதிரி–1**

**திரு.சு.நேசமணி, வயது 39/22,**
த/பெ. சுந்தராஜூ,
மண்டல மேலாளர்,
தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

**எதிரி–2**

**திருமதி.காயத்ரி, வயது 36/22**
க/பெ நேசமணி,
எண்.40, பெக்சல் நகர்,
மச்சுவாடி,
புதுக்கோட்டை

புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு விழிப்பு அறிக்கை எண்.03/2021ன்படி (Vigilance Report) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை மச்சுவாடி, பெக்சல் நகர், மனை எண்.40 என்ற முகவரியில் வசித்து வரும் எதிரி–1 திரு.சு.நேசமணி என்பவர் தமிழ்நாடு வனத்தோட்டக்கழகத்தில் 2006–ஆம் ஆண்டு கருணை அடிப்படையில் வனவராகப் பணியில் சேர்ந்து, படிப்படியாக வனசரகர், மண்டல மேலாளராக பதவி உயர்வு பெற்று தற்போது, தமிழ்நாடு வனத்தோட்டக்கழகத்தில் மண்டல மேலாளராக புதுக்கோட்டை மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறார். தமிழ்நாடு அரசு வனத்தோட்டக்கழகத்தில் இவர் பணியாற்றிய கடந்த 01.03.2014 முதல் 30.09.2021 வரையான காலத்தில் மட்டும், தனது வருமானத்திற்கு அதிகமாக ரூ.1,75,74,853/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தைந்து லட்சத்து எழுபத்தி நான்காயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தி மூன்று மட்டும்) ரூபாய் மதிப்பிற்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்களை, அவரது மனைவி எதிரி–2 திருமதி.காயத்ரி பெயரில் வாங்கி சேர்த்துள்ளார் என்ற விழிப்பு அறிக்கையின் விபரம் பின்வருமாறு : –

மார்ஜினில் கண்ட எதிரி திரு.சு.நேசமணி என்பவர் கடந்த 23.02.2020 முதல் புதுக்கோட்டை மாவட்டத்தில், தமிழ்நாடு வனத்தோட்டக்கழக மண்டல மேலளாராக பணிபுரிந்து வருகிறார். இவரது தந்தையார் திரு.சுந்தராஜூ என்பவர் தமிழ்நாடு வனத்தோட்டக்கழகத்தில் வனவராகப் பணியாற்றி கடந்த 2003 ஆம் ஆண்டு பணியில் இருக்கும் போதே இறந்துவிட்ட காரணததால் கடந்த 2006ஆம் ஆண்டு எதிரி–1 நேசமணி கருணை அடிப்படையில் வனவராக விழுப்புரம் மாவட்டத்தில் பணியில் சேர்ந்துள்ளார். எதிரி–1ன் மனைவி திருமதி.காயத்ரி என்பவர் எதிரி–1ன் உடன் பிறந்த சகோதரியின் மகளாவார். இவர்களுக்கு கடந்த 2006ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றுள்ளது. இவர்களுக்கு சுஜீதா என்ற ஒரு மகளும் (10ம் வகுப்பு சி.பி.எஸ்.சி), ஸ்ரீவிஷ்ணு (4ம் வகுப்பு சி.பி.எஸ்.சி) என்ற ஒரு மகனும் உள்ளனர்.

எதிரி–1ன் மனைவி திருமதி.காயத்ரி எந்த அரசு அலுவலகத்திலோ அல்லது தனியார் நிறுவனத்திலோ பணியாற்றவில்லை. அவர்களுக்கு பூர்வீகமாக சொத்து ஏதும் இல்லையென தெரிய வருகிறது. எதிரி–1ன் மாதாந்திர வருமானத்தை தவிர வேறு வருமானம் ஏதுமில்லை.

எதிரி-1 திரு.நேசமணி என்பவரின் மாத வருமானம் மார்ச்-2014 முதல் செப்டம்பர்-2021 7 வருடங்கள் 6 மாதங்களில் மாதாந்திர நிகர சம்பளம் தோராயமாக மொத்தம் ரூ.63,33,068/- ஆகும். இவரது குடும்ப செலவினம் கடந்த 8 ஆண்டுகளுக்கு தோராயமாக ரூ.21,11,023/- வரையில் செலவுகள் செய்துள்ளார்.

எதிரி-1 நேசமணி என்பவர் புதுக்கோட்டை நகரம் வடக்கு கிராமத்தில் பெரியண்ணா அம்மாள் நகர் பிளாட் எண். 37, புல எண்.58/3ல் 1507 சதுரடி பரப்பளவுள்ள காலி மனை (ஆவண எண்.1342/2012), புதுக்கோட்டை நகரம் வடக்கு கிராமத்தில் பழைய வார்டு எண்.13B செல்லம் நகரில் மனை எண்.30ல் 1200 சதுரடி கொண்ட மாடி வீடு, போர்வெல் மின் மோட்டார் கம்பவுண்ட் உள்ள வீடு ஆவண எண்.5573/2012 ஆகிய இரண்டு சொத்துக்களும் எதிரியின் குற்றமிழைப்பு காலத்திற்கு முன்பு சொந்தமாக இருந்த சொத்துக்கள் ஆகும்.

எதிரி-1 நேசமணி என்பவர் அவரது மனைவி எதிரி-2 காயத்ரி என்பவர் பெயரில் புதுக்கோட்டை நகரில் கவிநாடு மேலைப்பட்டியில் புல எண்.44.4இல் 1564 சதுரடியில் உள்ள கட்டடம், மின் இணைப்பு, போர்வெல்லுடன் மின் மோட்டார் உள்ள வீட்டை ரூ.9,70,030/-க்கு ஆவண எண்.1280/2014இன் படியும், புதுக்கோட்டை நகரம் வடக்கு கிராமம் அன்னசத்திரமேல்சேரி நகரில் புல எண்.6/5ல் மனை எண்.18,19இல் 1800 சதுரடியில் உள்ள காலிமனையைக் ரூ.6,50,550/-க்கு ஆவண எண்.2595/2014இன் படி சொந்தமாக வாங்கியுள்ளார்.

எதிரி-1 நேசமணி அவரது மனைவி எதிரி-2 காயத்ரி என்பவர் பெயரில் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, குழிபிறை ஆத்தூர் கிராமத்தில் புல எண்கள்.378/1,2,3,4, 389/1,2,3, 369/1,2,5,9,11,12,13, 370/2, 403/5இல் மின் இணைப்புடன் உள்ள கிணறு மற்றும் மோட்டார் உள்ள 7.47 ஏக்கர் நிலத்தை ரூ.11,89,910/-க்கு ஆவண எண்.2447/2014ன் படியும், புதுக்கோட்டை குளத்தூர் வெள்ளனூர் கிராமத்தில் சிப்காட் தொழிற்பேட்டையில் புல எண்.559/4Aஇல் மனை எண்.13இல் 0.25.0 ஹெக்டேர் இடத்தில் மின் இணைப்புடன் கூடிய ஆர்.சி.சி கட்டடத்தை ரூ.18,80,970/-க்கு ஆவண எண்.6260/2019ன் படியும் சொந்தமாக வாங்கியுள்ளார்.

எதிரி-1 திரு.நேசமணி என்பவர் மனைவி எதிரி-2 காயத்ரி என்பவர் பெயரில் புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுகா, கலாக் கிராமத்தில் புல எண்கள்.270/5A, 271/1B, 2, 3 301/3A மொத்தம் 2.44 ஏக்கர் கிணறு மற்றும் மின் மோட்டார் உள்ள நிலத்தை ரூ.9,66,394/-க்கு ஆவண எண்.1776/2020இன் படியும், புதுக்கோட்டை திருமயம் தாலுகா, கண்ணனூர் கிராமத்தில் புல எண்கள்.156/8, 156/11 தென்னந்தோப்பு, கிணறு மின் மோட்டார் உள்ள 10 ஏக்கர் புஞ்சை நிலத்தை ரூ.12,71,480/-க்கு ஆவண எண்.2305/2020ன் படியும் சொந்தமாக வாங்கியுள்ளார்.

எதிரி-1 நேசமணி புதுக்கோட்டை நகரம், வ.உ.சி நகரில் கடந்த 2014ஆம் ஆண்டில் புல எண்கள்.1148, 1146இல் உள்ள புறம்போக்கு இடத்தில் உள்ள ஒரு தளம் கொட்டகையுடன் கூடிய இடத்தை ரூ.3,00,000/- சொந்தமாக வாங்கியும், அதில் ரூ.22,00,000/- மதிப்புள்ள 8 வீடுகளை கட்டியுள்ளார். அதை மாதம் ரூ.60,000/-க்கு வாடகைக்கு விட்டுள்ளார். மேலும் எதிரி-1 நேசமணி அவரது மனைவி எதிரி-2 காயத்ரி பெயரில் ரூ.22,00,000/- மதிப்புள்ள TN55 BX 7609 Alturas Carum வாங்கியுள்ளார். மேலும் எதிரி-1 நேசமணி அவரது மனைவி காயத்ரி பெயரில்

Gayathri Crop Care நிறுவனத்தை ரூ.13,00,000/– முதலீட்டில் 2019 ஆம் ஆண்டு முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறார். மேலும் காயத்ரி பெயரில் ரூ.10,00,000/–க்கு Big Boss Shopping Mall நிறுவனத்தையும் நடத்தி வருகிறார்.

எதிரி–1 நேசமணி அவரது மனைவி காயத்ரி பெயரில் புதுக்கோட்டை நகரம் தெற்கு 3ஆம் வீதியில் ரூ.10,00,000/–க்கு Big Boss Trunks நிறுவனத்தை நடத்தி வருவதுடன், ரூ.10,00,000/–முதலீடு செய்து புதுக்கோட்டை டிவிஎஸ் கார்னரில் Sundar Currys என்ற ஹோட்டலையும் நடத்தி வருகிறார். எதிரி–1 நேசமணி மற்றும் அவரது மனைவி காயத்ரி ஆகியோர்களுக்கு சுமார் 120 பவுன் தங்க நகைகள் சொந்தமாக உள்ளது. அதன் மதிப்பு சுமார் ரூ.36,00,000/– ஆகும். எதிரி–1 நேசமணி பெக்சல் நகர், மனை எண்.40ல் ரூ.75,00,000/–க்கு சிறிய திரையரங்கம் உள்ள சொகுசு வீடு ஒன்றை கட்டியுள்ளார்.

***எனவே எதிரி–1 திரு.நேசமணி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளதாக கிடைக்கப்பெற்ற ஆவணங்கள் மற்றும் தகவல்களை தொடர்ந்து 01.03.2014 முதல் 30.09.2021 வரையில் கீழ்கண்டவாறு சொத்து சேர்த்துள்ளதாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

எதிரி–1 திரு.நேசமணி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் தோராயமான சொத்து மதிப்பு 01.03.2014 வரையிலான காலத்தில் ரூ. 19,95,850/– ஆகும்.

எதிரி–1 திரு.நேசமணி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் தோராயமான சொத்து மதிப்பு 01.03.2014 முதல் 30.09.2021 வரையிலான காலத்தில் ரூ.3,75,72,142/– ஆகும்.

எதிரி–1 திரு.நேசமணி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் தோராயமான வருமானங்கள் 01.03.2014 முதல் 30.09.2021 வரையிலான காலத்தில் ரூ.2,20,22,196/– ஆகும்.

எதிரி–1 திரு.நேசமணி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் தோராயமான செலவுகள் 01.03.2014 முதல் 30.09.2021 வரையிலான காலத்தில் ரூ. 40,20,785/– ஆகும்.

எதிரி–1 திரு.நேசமணி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் 01.03.2014 முதல் 30.09.2021 வரையிலான காலத்தில் சேர்த்துள்ள மொத்த சொத்துக்களின் தோராய மதிப்பு ரூ. 3,55,76,264 ஆகும்.

எதிரி–1 திரு.நேசமணி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் 01.03.2014 முதல் 30.09.2021 வரையிலான காலத்தில் சேர்த்துள்ள மொத்த சேமிப்பு தோராயமாக ரூ.1,80,01,411/– ஆகும்.

எதிரி–1 திரு.நேசமணி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் 01.03.2014 முதல் 30.09.2021 வரையிலான காலத்தில் காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக சேர்த்த சொத்தின் மதிப்பு ரூ. 1,75,74,853/– ஆகும்.

$$\frac{1,75,74,853}{2,20,22,196} \times 100 = \mathbf{80\%}$$

2ம் எதிரிக்கு வருமானம் இல்லாதபோதும், 1ம் எதிரியுடன் குற்ற உடந்தையாக இருந்து 1ம் எதிரியின் சட்டபூர்வமான வருமானத்திற்கு அதிகமாக சொத்துகளை சேர்த்துள்ளார் மற்றும் 1ம் எதிரி குற்ற எண்ணத்தில் சட்ட பூர்வமான வருமானத்தை மீறி சொத்துக்களை வசப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டு வருமானத்திற்கு அதிகமாக ரூ.1,75,74,853/– மதிப்பிலான சொத்துக்களை வாங்கியுள்ளார்.

எனவே எதிரி–1 நேசமணி, மண்டல மேலாளர், தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம், புதுக்கோட்டை மாவட்டம் என்பவர் மீதும் அவரது மனைவி எதிரி–2 காயத்ரி ஆகியோர் 01.03.2014 முதல் 30.09.2021 வரையான காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக வாங்கிய சொத்துக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகளைக் கொண்டு கணக்கிட்டதில், எதிரி–1 திரு.நேசமணி என்பவர் ரூ.**1,75,74,853/–** (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தைந்து லட்சத்து எழுபத்தி நான்காயிரது எண்ணூற்றி ஐம்பத்தி மூன்று மட்டும்) 80% சொத்து சேர்த்துள்ளதாக சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனரகத்திற்கு அனுப்பப்பட்ட விழிப்பு அறிக்கையின் (Vigilance Report) அடிப்படையில் சென்னை இயக்குனரக குறிப்பாணை எண்.VR.No.51365/2021/TAFICON/PK, நாள்.09.02.2022ன்படி எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய வழங்கப்பட்ட உத்தரவின்படி இன்று 25.11.2022 காலை 11.30 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குற்ற எண்.03/2022ன் படி எதிரி–1 திரு.நேசமணி, மண்டல மேலாளர், தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம், புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் திருமதி.காயத்ரி, க/பெ நேசமணி ஆகியோர் மீது சட்டப்பிரிவுகள் u/s 13(2) r/w 13(1)(e) of the PC Act, 1988 and 13(2) r/w 13 (1) (e) of the PC Act-1988 and 109 IPC for the period between 01.03.2014 and 25.07.2018 and u/s 13(2) r/w 13(1)(b) of the PC Act-1988 as amended in 2018 and 13(2) r/w 13(1)(b) r/w 12 of the PC Act-1988 as amended in 2018 for the period between 26.07.2018 and 30.09.2021 ன்படி என்னால் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் / தனி நீதிபதி புதுக்கோட்டை அவர்களுக்கு அனுப்பியும், ஊழல் தடுப்புச்சட்டம்–1988 பிரிவு 17 மற்றும் 18ன் படி வழக்கு விசாரணை செய்யவும், குற்ற அலுவலர்களின் வங்கி கணக்குகளை ஆய்வு செய்யவும் ஆணை வழங்க முதல் தகவல் அறிக்கையின் நகலை காவல் கண்காணிப்பாளர், மத்திய சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

25/11/22

**(க.இமயவரம்பன்)**
காவல் துணைக்கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
புதுக்கோட்டை